அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR **EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS**

# அரையாண்டுத்தேர்வு

# 2021/2022

# தமிழ்

## ஆண்டு 4

| | |
|---|---|
| **நேரம்: 120 மணித்துளிகள்**<br><br>**நாள்: 29.01.2022** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br>**பக்கங்கள்: 12** |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

## பகுதி 1 – எழுதுதல்

**1. பொருத்தமான விடையின் முன் புள்ளடியிடுக.**

1. உயிர்க்குறில் எழுத்துகளின் எண்ணிக்கை

☐ ஐந்து ☐ ஏழு ☐ மூன்று

2. குதிரை கனைக்கும் அதுபோல பூனை

☐ கத்தும் ☐ உறுமும் ☐ பிளிறும்

3. 300 என்பதன் எழுத்து வடிவம்

☐ முன்னூறு ☐ முந்நூறு ☐ முன்நூறு

4. உலகின் தொன்மையான மொழிகளுள் ஒன்று

☐ ஆங்கிலமொழி ☐ மலையாளமொழி ☐ தமிழ்மொழி

5. நீங்கள் என்பது

☐ தன்மை ☐ படர்க்கை ☐ முன்னிலை

6. மாதங்களுள் ஒன்று

☐ செவ்வாய் ☐ ஆடி ☐ ஞாயிறு

7. எப்போதும் எம்மோடு இருக்கக்கூடிய செல்வம்

☐ பணம் ☐ வீடு ☐ கல்வி

8. மேலே என்பதன் எதிர்ச்சொல்

☐ உயர ☐ கீழே ☐ தூர

9. பெயர்ச்சொல்லுக்கு ஓர் எடுத்துக்காட்டு

☐ வா ☐ நண்பன் ☐ வரைந்தான்

10. மிளகாய் தின்றால் உறைக்கும். அதுபோல புளியங்காய்

☐ புளிக்கும் ☐ துவர்க்கும் ☐ உவர்க்கும்

11. மரம் + வேர் என்பதைச் சேர்த்து எழுதினால்

☐ மரவேர் ☐ மரம்வேர் ☐ மறவேர்

12. செய்திகளை விரைவாகப் பரிமாற்றம் செய்யத் துணையாவது

☐ அஞ்சல் ☐ பறவைகள் ☐ இணையம்

13. பாலாடை என்பதைப் பிரித்தெழுதினால்

☐ பால் + ஆடை ☐ பால் + அடை ☐ பா + அடை

14. சிறு கூலங்களில் ஒன்று

☐ உருளைக்கிழங்கு ☐ பயறு ☐ கத்தரி

15. தை முதல் நாள் கொண்டாடப்படுவது

☐ தைப்பொங்கல் ☐ ஆடிப்பிறப்பு ☐ நத்தார்

(15x1=15 புள்ளிகள்)

**2. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொல்லியம் ஆக்குக.**

1. உண்மை / தரும் / உயர்வைத் / என்றும்

____________________________________________

2. இனிமையான / தமிழ் / ஓர் / மொழி

____________________________________________

3. பகல்நேரம் / பனிகாலத்தில் / இருக்கும் / குறைவாக

____________________________________________

4. மாந்தருக்குக் / முதன்மையானது / கல்வியே

____________________________________________

5. ஆட்டுக்குட்டி / துள்ளித்துள்ளித் / ஓடியது / தாயிடம்

____________________________________________

(5X2= 10 புள்ளிகள்)

**3. பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

| | | |
|---|---|---|
| பாடிப்பாடி | நல்லநல்ல | கமகம |
| கிடுகிடு | விம்மிவிம்மி | சலசல |

1. மூதாட்டி குளிரினால் ________________________ என நடுங்கினார்.
2. நாங்கள் பள்ளியில் ________________________ மகிழ்ந்தோம்.
3. தாயைக் காணாத குழந்தை ________________________ அழுதது.
4. மல்லிகைப்பூ ________________________ என மணம் வீசியது.
5. ஆற்றுநீர் ________________________ என ஓடியது.
6. நாங்கள் ________________________ நூல்களைப் படித்தல் வேண்டும்.

(6×1=6 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் சொற்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

1. மக்கள் - ________________________
2. வானொலி - ________________________
3. காடு - ________________________
4. காலை உணவு - ________________________
5. ஓவியங்கள் - ________________________
6. மணிக்கூடு - ________________________

(6×1=6 புள்ளிகள்)

**5. பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.**

1. ஆசிரியர் ________________________ கவிதையைப் பாராட்டினார்.
   (என்னுடைய, என்னால்)

2. திருக்குறள் ________________________ நல்ல கருத்துகளைக் கூறுகின்றது.
   (ஒன்று, ஒவ்வொன்றும்)

3. உலகில் பல மொழிகள் உள்ளன. ________________________ ஒன்று தமிழ்மொழி.
   (அவற்றுள், இவற்றுள்)

4. பேச்சுப்போட்டியில் ________________________ப் பரிசு கிடைத்தது.
   (என்னால், எனக்கு)

5. இப்பையில் சில நூல்கள் உள்ளன. ________________________ ஒன்றை எடுத்துப் படி.
   (இவற்றுள், அவற்றுள்)

6. நாங்கள் ________________________ விண்ணுந்தில் சென்றுகொண்டு இருக்கிறோம்.
   (இப்பொழுது, அப்பொழுது)

(6×1=6 புள்ளிகள்)

**6. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. முற்காலத்தில் செய்திகளை அனுப்பப் பயன்படுத்தப்பட்ட பறவை எது?

   ________________________________________________

2. ‘தமிழ்மொழி’ என்ற சொல்லில் இடம்பெற்றுள்ள மெய்யெழுத்து எது?

   ________________________________________________

3. நாலடியார் எத்தனை அடிகளைக் கொண்டது?

   ________________________________________________

4. ஆடிப்பிறப்பன்று சிறப்பாகச் செய்யும் உணவுகளுள் ஒன்றினை எழுதுக.

   ________________________________________________

5. வினைச்சொற்கள் இரண்டு எழுதுக.

   ________________________________________________

(5×2=10 புள்ளிகள்)

**7. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப்பற்றி ஆறு (6) சொல்லியங்கள் எழுதுக.**

1. கல்வியின் சிறப்பு
2. எனது தமிழ்ப்பள்ளி
3. தமிழர் கொண்டாட்டங்கள்

(6×2=12 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. கீழ்க்காணும் பந்தியை வாசித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.**

சேரன் தன் வீட்டில் ஓர் அழகிய தோட்டத்தை அமைத்தான். அதில் வெண்டி, கத்தரி, தக்காளி போன்ற காய்கறிச்செடிகளையும் செவ்வரத்தை, செவ்வந்தி, மல்லிகை போன்ற பூச்செடிகளையும் நட்டான். காலையும் மாலையும் நீர் ஊற்றி நன்றாக வளர்த்தான். தோட்டத்தில் மலர்ந்திருந்த பூக்களையும் காய்த்திருந்த காய்கறிகளையும் பார்த்து மகிழ்ந்தான். தனது தோட்டத்தில் காய்த்திருந்த வெண்டி, கத்தரி, தக்காளி ஆகிய காய்கறிகளைத் தாயாரிடம் கொடுத்தான். தாயார் சேரனின் முயற்சியைப் பாராட்டினார். நாமும் இவ்வாறு வீட்டுத்தோட்டங்களை அமைத்து மகிழ்வோம்.

1. வீட்டுத்தோட்டம் அமைத்தவன் யார்?

   ______________________________

2. தோட்டத்தில் நடப்பட்ட பூச்செடிகள் எவை?

   ______________________________

3. தோட்டத்தில் காய்த்திருந்த காய்கறிகள் எவை?

   ______________________________

4. செடிகளுக்கு எப்போது நீர் ஊற்றினான்?

   ______________________________

5. சேரனின் முயற்சியைப் பாராட்டியவர் யார்?

   ______________________________

(5×2=10 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் நாட்குறிப்பைப் படித்து கூற்றுகள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடையாளமிடுக.**

**கதிரவனின் நாட்குறிப்பு**

புதன்கிழமை

| **நேரம்** | **விடயம்** |
|---|---|
| 07:40 – 12:10 | பள்ளி |
| 12:30 – 13:30 | மதிய உணவு |
| 14:00 – 16:00 | தமிழ்ப்பள்ளி |
| 16:30 – 17:30 | நீச்சல் பயிற்சி |
| 18:00 – 19:00 | வீட்டுப்பாடம் செய்தல் |
| 19:00 – 20:00 | குடும்பத்தினருடன் இரவு உணவு |
| 20:30 | படுக்கைக்குச் செல்லுதல் |

1. கதிரவன் 14:00 – 16:00 மணிவரை தமிழ்ப்பள்ளிக்குச் செல்வான். (     )
2. கதிரவன் புதன்கிழமைகளில் நீச்சல் பயிற்சிக்குச் செல்வான். (     )
3. கதிரவன் புதன்கிழமை வீட்டுப்பாடம் செய்வதில்லை. (     )
4. கதிரவன் தனியாக இரவு உணவு உண்பான். (     )
5. கதிரவன் 20:30 மணிக்குப் படுக்கைக்குச் செல்வான். (     )

(5×1=5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 15 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 06 | | | |
| 4 | 06 | | | |
| 5 | 06 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 12 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |